# வா பாவி மலைத்து நில்லாதே வா

வா பாவி மலைத்து நில்லாதே வா

என்னிடத்தில் ஒரு நன்மையுமில்லை
என்றெண்ணித் திகையாதே
உன்னிடத்தில் ஒன்றுமில்லை அறிவேனே
உள்ளபடி வாவேன் - வா பாவி

உந்தனுக்காகவே நானடிபட்டேன்
உன் பாவத்தைச் சுமந்தேன்
சிந்திய என் திரு இரத்தத்தால் உன் பாவம்
தீர்த்து விட்டேன் பாவி - வா பாவி

என்னிடத்தில் வரும் வாவி
எவரையும் இகழ்ந்து தள்ளேனே
மன்னிய மேலோக வாழ்வை அருள்வேனே
வாராயோ பாவி - வா பாவி